பக்கங்கள்: 06
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை 03.12.2021 கதிர் 256

## பாடசாலை விடுமுறை டிசெ.24 முதல் ஜன.02

சகல பாடசாலைகளுக்குமான விடுமுறை தொடர்பில் கல்வி அமைச்சு புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கு அமைய அனைத்து அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் டிசெம்பர் மாதம் 24 ஆம் 2

# மோடியைச் சந்திக்காமல் நாடு.திரும்பினார் பஸில்!

## வெறுங்கையோடு இலங்கை புகுந்தார்?



கொழும்பு, டிசெம்பர் 03

இந்தியாவிடம் பெருந்தொகையான பொருளாதார உதவிகளைப் பெறும் திட்டத்துடன் புதுடில்லி பறந்த நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று கொழும்பு மீண்டார். அங்கு அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பார் எனக் கூறப்பட்ட போதிலும் அந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை. அதேபோல இந்தியாவிடம் எதிர்பார்த்த பெருளாதார உதவிகளையும் அவரால் பெறமுடியாமல் போயிற்று 2

## இருபாலையிலும் எரிவாயு அடுப்பில் பெருந் தீப்பரவல்

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்துப் பற்றிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் தெற்கு இருபாலையில் உள்ள ஒரு வீட்டில் 2




## இலங்கையிலும் கால் பதித்தது ஒமிக்ரோன் வைரஸ்

### முதல் தொற்றாளர் அடையாளம்!

கொரோனா வைரஸின் திரிவான ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுடன் இலங்கையில் முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். 2

## சஹ்ரானின் மனைவிக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரம் சமர்ப்பணம்

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் மனைவியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவிற்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் நேற்று குற்றப்பத் 2

## நாடு முழுவதும் திடீர் மின் தடை

### நாசகார வேலை எனச் சந்தேகம்

நாடு முழுவதும் இன்று முற்பகல் 11.30 மணி முதல் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. 2

## தென்னமரவாடியில் குளவிக் கொட்டுக்கு வயோதிபர் பலி

திருகோணமலை - தென்னமரவாடி பகுதியில் நேற்றுக் காலை குளவிக் கொட்டுக்கு இலக்கான ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 2

## ரயில் சேவை பாதிப்பு

மின்சாரத் தடை காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் ரயில் சேவைகளில் தாமதம் ஏற் 2

## தமிழரின் காணி பிடிக்கவா ஜீவனுக்கு ஆளுநர் பதவி?

### நாடாளுமன்றத்தில் சிறிதரன் சீற்றம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.03

தமிழ் மக்களின் காணி பிடிக்கவா ஜீவன் தியாகராஜா ஆளுநராக நியமிக்கப்பட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான இன்றைய விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:- 2

## ரயிலுடன் மோதுண்டு வாகன சாரதி மரணம்

### மிருசுவிலில் இன்று சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் இன்று பிற்பகல் குளிரூட்டப்பட்ட ரயிலுடன் மகேந்திரா ரகவாகனம் மோதி ஏற்பட்ட விபத்தில் அந்த வாகன சாரதி உயிரிழந்துள்ளார்.

இதன்போது மிருசுவிலைச் சேர்ந்த எஸ்.பிரதீப் என்னும் 38வயதுடையவரே உயிரிழந்தார் என்று 2

## கூட்டமைப்பும் முன்னணியும் வெளிநடப்பு

இன்று நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தின் முடிவில் விடயத்தை வாக்கெடுப்புக்கு விடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் 2

# அபுதாபியில் இந்து சமுத்திர உச்சிமாநாடு கோட்டாபய நாளை அங்குரார்ப்பண உரை

## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை அங்கு சந்திப்பார்?



கொழும்பு, டிசெம்பர்,03

இந்து சமுத்திர உச்சிமாநாடு நாளையும் மறுதினமும் அபுதாபியில் நடைபெறுகின்றது. அந்த மாநாட்டின் தற்போதைய தலைமைத்துவம் இலங்கையிடம் இருப்பதால், நாளை ஆரம்பமாகும் உச்சிமாநாட்டை இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை தாங்கி, அங்குரார்ப்பண உரையை நிகழ்த்துகின்றார்.

இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து 2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பாடசாலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திகதி முதல் 2022 ஜனவரி 02 ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## இருபாலையிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த போது எரிவாயு அடுப்பு பற்றி எரிவதை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று அயலவரை அழைத்துள்ளார்.

அயலவர்கள் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையினால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.

## நாடு முழுவதும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த மின் தடை, மின் பொறியியலாளர் சங்கத்தின் நாசகார வேலையால் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தினர் மின்சார மீள் இணைப்பு பணிகளை வேண்டும் என்றே இழுத்தடிப்பு செய்கின்றனர் என மின்சார சபை பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

எனினும், மின்விநியோகம் சீரமைக்கப்பட்டு வருவதுடன் 400 மெகா வோட் மின்சாரம் மீள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கொழும்பில் பல பகுதிகளுக்கும் அநுராதபுரம், ஹபரணை, லக்ஷபான - அதுருகிரிய மற்றும் கொத்மலை - பியகம ஆகிய மின் விநியோக பாதைகளுக்கான மின்சார விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே சமயம் -

மின் உற்பத்தி நிலையங்களில் சேவையாற்றும் பொறியியலாளர்களின் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று இரவு 6 மணியளவில் மின் விநியோக சேவை ஓரளவுக்கு வழமைக்குத் திரும்பியது.

## இலங்கையிலும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நைஜீரியாவில் இருந்து இலங்கை வந்த ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தத் தொற்றாளர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டு பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதே பகுதியைச் சேர்ந்த கனகசபை குகநாதன் (69 வயது) எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டிலிருந்து மாடு பார்ப்பதற்காக சென்ற போது மரத்திலிருந்து குளவி கூடு கலைந்து இந்த நபரைக் கொட்டியதாகவும், இதனை அடுத்து புல்மோட்டை தள வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ரயில் சேவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

மின்சாரத் தடை காரணமாக ரயில் சமிக்ஞைகளில் ஏற்பட்டுள்ள செயலிழப்பு காரணமாகவே இந்த ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய மக்கள் முன்னணியும் விடுத்த கோரிக்கை சபாநாயகரினால் நிராகரிக்கப்பட்டமையை அடுத்து இன்று நாடாளுமன்றில் இருந்து இரண்டு கட்சிகளின் எம்.பிக்களும் வெளிநடப்புச் செய்தனர்.

## சஹ்ரானின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதிக்கும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சாரா ஜஸ்மின் என்றழைக்கப்பட்ட புலஸ்தினி மகேந்திரன் என்பவர் வெடிபொருள்களை தயாரித்தமை மற்றும் அவற்றை சேகரித்து வைத்திருந்தமை தொடர்பில் அறிந்திருந்தும், அந்த தகவலை பொலிஸாருக்கு தெரிவிக்காமை குறித்து சஹ்ரானின் மனைவிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் பிரதிவாதியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியா குற்றமிழைத்துள்ளார் என குற்றப்பத்திரத்தினூடாக சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

பிரதிவாதி கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என வழக்குத் தொடுநர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய அரச தரப்பு சட்டத்தரணி மாதினி விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

விடயங்களை பரிசீலித்த நீதிபதி ஜே.ட்றொக்ஸி, எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி பிரதிவாதியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவை மன்றில் ஆஜராக்குமாறு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## தமிழரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களின் நிலங்களை அபகரித்த படையினர் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலா அந்த நிலங்களில் அடுக்குமாடிகளை கட்டுகின்றனர் என கேட்க விரும்புகின்றேன். தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றன.

இதேநேரம் முல்லைத்தீவில் நவம்பர் 27ஆம் திகதி ஊடகவியலாளர் விஸ்வா மீது இராணுவத்தினர் மிலேச்சத்தனமாக தாக்குகின்றனர். டிசெம்பர் 02ஆம் திகதி உதயன் பத்திரிகையின் செய்தியாளர் சுலக்சன் பருத்தித்துறையில் துப்பாக்கி முனையில் பொலிஸாரால் அச்சுறுத்தப்படுகின்றார். இது பொலிஸாரின் அராஜகம். ஊடகவியலாளர்களிற்கு இது தான் நிலைமை. அவர்களின் நிலை இவ்வாறுதான் உள்ளது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செய்தியை எடுக்க முடியவில்லை. ஊடகவியலாளர்களிற்கு எதிராக கத்துவக்கு தூக்கும் பொலிஸார் யாழ்ப்பாணத்திலே கடந்த ஒரு வாரத்தில் ஆறு ஆண்களின் சடலம் கடல் கரையில் கரை ஒதுங்கியுள்ளமை தொடர்பில் ஏதும் கண்டறியவில்லை. மொத்தம் ஆறு உடல்கள் கரை ஒதுங்கியபோதும் எதுவுமே எவருடையது என இனம் காணப்படவில்லை.

இலங்கையின் பொலிஸார் கெட்டிக்காரர்கள். ஊடகவியலாளர்களைச் சுடுவார்கள், மக்களைச் சுடுவார்கள், ஆனால் இந்த உடல்கள் யாருடையவை எனக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளார்கள்.

இதேநேரம் வடக்கில் யாரும் காணி அளக்க இடையூறாக இருந்தால் - அவர்கள் அரசியல் தலைவர்கள் என்றாலும் - அவர்களைப் பிடித்து உள்ளுக்கு தள்ளுவேன் என்கின்றார் ஆளுநர் ஜீவன் தியாகராஜா. காணி பிடிக்கவா ஜீவன் தியாகராஜா ஆளுநராக நியமிக்கப்பட்டார்? - என்றார்.

## மோடியைச் சந்திக்காமல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் சில வட்டாரங்கள் முதலில் செய்தி வெளியிட்டன.

'வீரமும் களத்தே போகி வெறுங்கையுடன் இலங்கை புக்கான்' என்ற இராவணேஸ்வரன் போல நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் எதிர்பார்த்த பொருளாதார உதவித் திட்டங்கள் கிட்டாத நிலையில் நாடு மீண்டிருக்கிறார் எனக் கூறப்பட்டது.

கடைசியாக இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் இலங்கை வந்திருந்த போது, அவருக்கு உறுதியளிக்கப்பட்ட சில விடயங்களை கொழும்பு இன்னும் நிறைவேற்றாதமை குறித்து பஸிலின் இந்த விஜயத்தின் போது புதுடில்லி தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நவம்பர் 15 இற்கு முன்னர் பலாலி சர்வதேச விமான நிலையத்தை மீளத் திறத்தல், காரைக்கால் - காங்கேசன் படகுச் சேவையை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளும் கொழும்பினால் உறுதியளிக்கபட்டு தவறவிடப்பட்ட விடயங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

நிதி அமைச்சர் பஸிலின் புதுடில்லி விஜயம் தொடர்பில், புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பில் இந்தியா பல உதவித் திட்டங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு உறுதியளித்திருக்கின்றது என்று கூறப்பட்டாலும், நிதி அமைச்சர் பஸில் எதிர்பார்த்த காத்திரமான உதவிகளை இந்தியாவிடமிருந்து அவரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அபுதாபியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டு உரையாற்றுகின்றார்.

மாநாட்டுக்கு இடையே இலங்கை ஜனாதிபதி - இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்திப்புக்கு வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டது. எனினும் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்து சமுத்திரக் கரையோர நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் சுமார் இருநூறு பேர் பங்குபற்றும் இந்த மாநாட்டில் முப்பது நாடுகளைச் சேர்ந்த ஐம்பது பேர் வரை உரையாற்றவுள்ளனர்.

இந்தத் தடவை 'இந்து சமுத்திரம்: சூழலியல், பொருளாதாரம், பெருந்தொற்று' என்ற தலைப்பில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகின்றது. இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று அபுதாபி புறப்படவிருக்கிறார். (உ)

## ரயிலுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் தெரிவித்தனர்.



யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியே விபத்து இடம்பெற்றது.


### சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்பு மாற்று சிகிச்சை செய்வதற்கு சிறுநீரகம் (A+ குருதி இனம்) அவசரமாகத் தேவைப்படுகிறது. தானம் செய்ய விரும்புபவர்கள் புகைபிடித்தல், மதுப்பழக்கம் இல்லாதவர்களாகவும் இருதய நோய், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். HLA Report வைத்திருப்பவர்கள் அவசரமாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 0773126807





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சேறு பூசிய வேலை

'குளிக்கப்போய் சேறு பூசிக் கொள்வது' என்பார்கள்.

வடக்கின் புதிய ஆளுநரும் அவருடன் சேர்ந்தோரும் 'சமய சமரசம்' என்ற பெயரில் – அல்லது சகல மதங்களுக்கும் சமமான கவனிப்பு என்ற கோட்பாட்டுச் சிந்தனையில் – மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அப்படித்தான் தோன்றுகின்றன.

அதுவும் 'ஆரியகுளம் மகிழ்வூட்டுத் திடல்' திறப்பு விழாவை ஒட்டி 'ஆளுநர் அண்ட் கோ' நடந்து கொண்ட விதம் முழுமையாக சிறுபிள்ளைத்தனமானது.

'ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல்' திறப்பு ஏற்பாடு யாழ் மேயர் மணிவண்ணனினதும் அவரது தலைமையிலான மாநகரசபையினரதும் நிகழ்வு.

அந்த நிகழ்வுக்கு மதிப்புக்குரிய பிரதம அதிதியாக ஆளுநர் அழைக்கப்பட்டிருக்கின்றார். அந்த மதிப்புக்குரிய பண்பியலில் நடந்து கொள்ள வேண்டியது அவரது பதவி நிலைக்கான இலக்கணம். பிரதம அதிதி என்ற கௌரவிப்புக்குரிய மாண்பு.

அதை அவர் பேணத் தவறிவிட்டார் என்பதை விசனத்துடன் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

பிரதம அதிதியாக அழைப்புத் தந்தவர்களின் நிகழ்வில் இன்னொரு வரவேற்பை ஏற்பாட்டாளர்களுக்கு – அழைப்பாளர்களுக்கு – தெரியாமலேயே இடைச்செருக்கலாகச் செருக சேர்ந்து இடமளித்தும் அதில் போய் பிரதம அதிதியாகவே தலையை நுழைத்தும் சிறுபிள்ளைத்தனமாக நடந்து, சிறுமையாகச் செயற்பட்டு விட்டார் ஆளுநர்.

தென்னிலங்கையில் தினசரி நூற்றுக்கணக்கான அரச நிகழ்வுகள் கண்டிய மேள, தாளங்கள், நடனங்களுடன் – பௌத்த சிங்களப் பாரம்பரியப்படி – நடக்கின்றன. அங்கெல்லாம் ஆளுநர்களாக ஜீவன் தியாகராஜாக்கள் இல்லை. அதனால் போலும் அந்த நிகழ்வுகளில் இந்த நாட்டின் நான்கு மதங்களிலும் அவற்றை ஒட்டிய பண்பு பழக்கவழக்கங்களிலும் ஒன்றான தமிழர்களின் மேள, தாள, நாதஸ்வரங்கள் இடம்பெறுவதில்லை.

இங்கும் கூட – ஆரியகுளத் திறப்பு விழாவுக்கு – நாக விகாரை விகாராதிபதி, வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநர் ஆகியோரை நிகழ்வுக்கு அழைத்தவர்கள் நிகழ்வு ஏற்பாட்டாளர்களான யாழ் மாநகரசபையினர். அவர்களுக்குத் தெரியாமல் தங்களுக்குத் தாங்களே, பௌத்த முறைமையில் குடை பிடித்து, கண்டிய நடனக் குழுவினரைத் தருவித்து, கண்டிய இசை ஒலிகள் முழங்க, தங்களைத் தாங்களே வரவேற்றுக் கொண்டமை மூலம் இந்த மூவரும் சொல்ல விழைந்ததுதான் என்ன?

அதுவும் மாநகரசபையின் நிகழ்வுக்கு இடையில் – ஏற்பாட்டாளர்களுக்குத் தெரியாமல் – இப்படியொரு திருக்கூத்தைப் பலவந்தமாகச் செருகியமை மூலம் சகல சமயங்களினதும் மதிப்பை உறுதிப்படுத்தி விட்டோம் என இம்மூவரும் கருதுவார்களேயானால் அது, மதியீனம் என்றுதான் அர்த்தம்.

தங்களை வரவேற்க இத்தகைய சடங்காட்டங்களைத் தாங்களே செய்வது ஒரு வகையான பிறழ்வுச் சிந்தனை என்றுதான் நோக்கப்பட வேண்டும்.

ஆரியகுளம் விடயத்தில் தங்களுக்கு உரித்து அதிகம் இருப்பதாக நாகவிகாரை விகாராதிபதி கருதுவாரானால், அதை நிலை நிறுத்துவது இப்படி இன்னொருவர் நிகழ்ச்சியில் அடாத்தாகக் காரியம் பண்ணி அல்ல. அதற்குத் துணைபோனமை மூலம் ஆளுநரும் பிரதம செயலாளரும் கூட சமய சமரசத்துக்கு வழி செய்துவிடவில்லை. மாறாக, கசப்புணர்வுகளைத்தான் கிளறி விட்டிருக்கின்றார்.

சகிப்புத் தன்மையையும், மற்றவர்களை மதிக்கும் மாண்பையும், பிறரை அரவணைக்கும் தாராண்மையையும் போதித்த கௌரவ புத்தரைத் தவறாமல் புரிந்து கொண்டு, வழமை போல தென்னிலங்கையின் பேரினவாத மேலாண்மைச் சிந்தனைப் போக்கின் பிரதிபலிப்பாகவே இந்த நாடகம் இங்கு அரங்கேறியிருக்கின்றது.

இது குளிக்கப்போய் தமக்குத் தாமே சேறு பூசிய வேலையன்றி வேறில்லை.

# இ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் விருது வழங்கும் விழா நாளை

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கிவரும் இ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் கணனிப் பாடநெறிகளைப்பூர்த்திசெய்தோருக்கான டிப்ளோமா சான்றிதழ்கள்வழங்கும்வைபவம்கல்லூரியின் அதிபர் தேசமானிய லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நாளை (சனிக்கிழமை) காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உளவியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மு.கஜவிந்தனும் சிறப்பு விருந்தினர்களாக கொமர்ஷல் வங்கியின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரும் நிர்வாக இயக்குநருமான லயன் எஸ்.ரங்கநாதன் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் பணிப்பாளர் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் டாக்டர் அ.ஜெயக்குமார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் அதிசிறந்த பெறுபேறைப் பெறுகின்ற மாணவருக்கு, கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநர் லயன் எஸ்.ரங்கநாதன் தனது தந்தையின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருடமும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பணப் பரிசை வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வு நேரடியாகவும் இணைய வழியிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு கசிவால் இதுவரை 131 வெடிப்புச் சம்பவங்கள்!

நாட்டில் இந்த வருடத்தின் புதன்கிழமை வரையான காலப்பகுதியில் 131 எரிவாயு கசிவால் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எரிவாயு சிலிண்டர் தீப்பற்றுதல் மற்றும் வெடிப்பது தொடர்பாக ஆராய்ந்து தீர்வுகளை கண்டறிவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கூடி ஆராய்ந்த போதே குறித்த குழு இந்த விடயங்களை தெரிவித்துள்ளது.

இதில், எரிவாயு சிலிண்டருக்கு சிறு சேதம் - 05, எரிவாயு விநியோக குழாய் சேதம் - 09, ரெகுலேட்டருக்கு சேதம்- 10, எரிவாயு அடுப்பு வெடிப்பு- 56, வாயுக் கசிவுகள் - 47, அதிக வெப்பத்தால் ஏற்படும் விபத்துக்கள் - 04 என பதிவாகியுள்ளன.

தற்போது அவதானிக்கப்பட்டுள்ள சம்பவங்களின் அடிப்படையில் ஆபத்துக்களைத் தவிர்க்க அவசர நடவடிக்கை எடுக்கப்படுவதன் ஓர் அங்கமாக, பொதுமக்களுக்குப் பின்வரும் பாதுகாப்பு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

01. நீங்கள் சந்தையில் இருந்து ஒரு எரிவாயு சிலிண்டரை வாங்கும் போது, அந்த சிலிண்டரில் இருந்து எரிவாயு கசிவு ஏதும் இல்லை என்பதை விற்பனை முகவரிடமிருந்து உறுதிப்படுத்திய பின்னர் வாங்குங்கள்.

02. எரிவாயு சிலிண்டரில் எரிவாயுக் கசிவை நீங்கள் கவனித்தால், அல்லது சந்தேகம் இருந்தால், வீட்டிலிருந்து அகற்றி, சரியான காற்றோட்டத்துடன் திறந்த இடத்தில் வைக்கவும்.

03 .பிறகு உங்கள் எரிவாயு முகவரிடமும், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் வழங்குங்கள்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி குழுவிற்கு, பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் ஏதாவதொன்றை அழைத்து தகவல் தெரிவிக்கவும், (011 5 811 927 அல்லது 011 5 811 929)

04. எரிவாயு சிலிண்டர்களில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரால் சோதிக்கப்படும் வரை அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படாத சோதனைகளை மேற்கொள்ள வேண்டாம். ஆபத்தில் இருக்கும் தொகுதிகளின் தேவையற்ற ஆய்வுகளைத் தவிர்க்கவும்.

5. அண்மைய சம்பவங்கள் எதிலும், எரிவாயு சிலிண்டரில் வெடிப்பு நிகழவில்லை. இந்த சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விபத்துக்களைக் குறைப்பதற்கான விரைவான நடவடிக்கையாக, உங்கள் எரிவாயு சிலிண்டரில் உள்ள ரெகுலேட்டர், எரிவாயு விநியோக குழாய், எரிவாயு அடுப்பு இணைப்புக்கள் சரியாக இயங்குவதையும், எரிவாயு ஸ்டவ் சரியாக பொருத்தப்பட்டிருப்பதையும் உறுதி செய்து கொள்ளவும். பழுதடைந்த எரிவாயு அடுப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

6. இலங்கையின் தரநிலை நிறுவனத்தால் செய்யப்பட்ட பரிந்துரையின்படி, 51.5-1180 ரெகுலேட்டர்கள் மற்றும் 51-5- 1172 எரிவாயு விநியோக குழாய் மற்றும் பாகங்களை பயன்படுத்துங்கள்.

ஒரு ரெகுலேட்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட ஆயுள்காலம் 05 ஆண்டுகள் மற்றும் எரிவாயு விநியோக குழாய்க்கு பரிந்துரைக்கப்பட்ட ஆயுள்காலம் 02 ஆண்டுகள் ஆகும்.

07. பணியிடங்கள் மற்றும் சிறிய தொழிற்சாலைகளில் எரிவாயுவைப் பயன்படுத்தும் போது, பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநரின் ஆலோசனையைப் பெறவும் மற்றும் பொருத்தமான சுற்றுப்புற வெப்பநிலைக்கு இணங்கக்கூடிய துணைப் பொருள்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்யவும்.

08. வாயுக் கசிவுதொடர்பாக எச்சரிக்கையாக இருங்கள். சிலிண்டரிலிருந்து வித்தியாசமான வாசனை வருகின்றதா என்பதில் அவதானமாக இருங்கள்.

9. இந்த ஆண்டு ஏற்பட்ட விபத்துக்களில் அதிகமானவை அடுப்பின் கண்ணாடி உடைந்தமை தொடர்பானவையே.

10. அடுப்பு பாவனை முடிந்ததும், ரெகுலேட்டரை அகற்றாமல், அடுப்பிற்கான எரிவாயு விநியோகத்தை நிறுத்தும் ஆழியை திருப்பி, எரிவாயு விநியோகத்தை நிறுத்துங்கள்.

11. சமையலறையில் எரிவாயு அடுப்பை இயக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் கதவுகள் மற்றும் யன்னல்களைத் திறந்து விடுங்கள். மேலும், எரிவாயு விநியோகத்துக்கு முன், அருகில் மின் இணைப்பு, மொபைல் போன்கள் போன்றவை தவிர்த்து விடுங்கள்.

இதேவேளை, இன்றைய தினமும் நாட்டின் சில பகுதிகளில் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் அதுகுறித்த முறைப்பாடுகளை அறிவிக்க பொதுமக்களுக்கு விசேட தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 8 பேரடங்கிய குழுவின் தலைவர் பேராசிரியர் சாந்த வல்பெலகே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவால் இலங்கைக்கு 17.9 கோடி டொலர் நிதி உதவி

அமெரிக்காவால் 26 லட்சம் தடுப்பூசிகள் மற்றும் அத்தியாவசிய சேவை வழங்கலுக்காக 17.9 கோடி டொலர் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா இதுவரை 100 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 24 கோடி கொரோனாத் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதன் கீழ், நேற்று காலை நாட்டுக்கு சுமார் 2 லட்சம் பைஸர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

# கிழக்கு பல்கலை ஊழியர் சங்கம் மௌன தொழிற்சங்கப் போராட்டம்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் உள்ள வளாகங்களுக்கு முன்பாக நேற்று தொழிற்சங்கப் போராட்டமொன்று இடம்பெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய நீண்டகாலமாக நிலவிவரும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் இடம்பெற்றது.

இதனொரு கட்டமாக மட்டக்களப்பில் உள்ள கிழக்கு பல்கலைக்கழக வளாகங்களுக்கு முன்பாக நேற்று இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வினை வழங்கு, சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்து போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியிருந்தனர்.




கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவும் மட்டக்களப்பில் உள்ள சௌக்கிய விஞ்ஞான பீடத்திற்கு முன்பாகவும் கல்லடி, நாவற்குடா சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்திற்கு முன்பாகவும் இந்த அமைதி வழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# 3 பிள்ளைகளின் தந்தை தூக்கிட்டு தற்கொலை

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பன்சேனை பிரதேசத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான மகிழடித்தீவைச் சேர்ந்த சோமசுந்தரம் உதயகுமார் (வயது-46) என்பவர் தனக்குத்தானே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் தனது வதிவிடத்திலிருந்து பன்சேனை பிரதேசத்திற்கு தனது தாயின் வீட்டுக்கு சென்றவர் வீடு திரும்பாத நிலையில் வீட்டுத்தோட்டம் செய்கை பண்ணப்பட்ட வளாகத்தில் உள்ள மரம் ஒன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையை கண்டு, ஆடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்ற ஒருவர் மரணமானவரின் வீட்டாருக்கு சம்பவத்தை தெரிவித்தார் என ஆரம்பக் கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் அவர்களின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசடித்தீவு சக்தி மகளிர் இல்லத்திற்கு தளவாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட அரசடித்தீவு சக்தி மகளிர் இல்லத்திற்கு தளவாடங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இவை வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் உத்தியோகபூர்வ செயலாளரும், இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் முகாமையாளருமான மதிமேனனினால் இவை வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி கிளையின் பட்டிருப்புத் தொகுதியின் தலைவர் பா. அரியநேந்திரன், பட்டிருப்பு தொகுதியின் பொருளாளர் நடராஜா, பட்டிப்பளை தமிழரசுக்கட்சி கிளையின் தலைவர் நேசதுரை மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் புஸ்பலிங்கம் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

# கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தார் இலங்கைக்கான ஜேர்மன் உயர்ஸ்தானிகர்

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

குறித்த சந்திப்பு திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில், நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் விவசாயத்துறை தொடர்பான அபிவிருத்திக்கு, ஜேர்மன் அரசாங்கம் முடியுமான பூரண ஒத்துழைப்பை வழங்க உள்ளது.

சுமார் 250 இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள், இலங்கையில் முதலீடு செய்வதற்குத் தயாராக இருக்கின்றனர் என கிழக்கு ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் பிராந்திய அபிவிருத்தி உட்பட ஏற்றுமதி வாய்ப்புகளும் ஐரோப்பிய சந்தைக்கு மேற்கொள்ள ஏதுவாக அமையும் எனக் கூறப்படுகின்றது.

முதலீட்டு வாய்ப்புகள் மூலம் இலங்கையினுடைய பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்க முடிவதோடு ஏற்றுமதி அபிவிருத்தியும் ஏற்படக்கூடிய நிலைவரம் ஏற்படும் என ஜேர்மன் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜேர்மன் உயர்ஸ்தானிகருடன் ஜேர்மன் வர்த்தக சங்க தலைவரும் இதில் கலந்து கொண்டமையுடன், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ.வணிகசிங்க, ஆளுநரின் செயலாளர் எல்.பீ. மதனாயக்க உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறிய 7 உணவகங்களுக்கு மட்டக்களப்பில் அபராதம்

மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற தவறிய பிரபலமான 3 உணவகங்கள் உட்பட 7 உணவகங்களை தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 70 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் நேற்று உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

மட்டக்களப்பு சுகாதார அதிகாரி பிரிவிலுள்ள வெட்டுக்காடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நகர்ப் பகுதியிலுள்ள உணவகங்களை நேற்று திடீர் முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது செயற்பட்ட பிரபல்யமான 3 உணவகங்கள் உட்பட 7 உணவகங்களுக்கு எதிராக உணவு சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து வழக்கை விசாரணைக்கு எடுத்த போது தலா ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம், 70 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு நீதிவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முதுகுத் தண்டுவடம் பாதித்தோருக்கான மறுவாழ்வு மையம் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்




சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பான முறையில் சேவையாற்றியவர்களுக்கான மாநில விருதுகளை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின்போது பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பணி நியமன ஆணையை தமிழக முதலமைச்சர் வழங்கினார். மேலும், முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு கோடியே 64 லட்சம் ரூபா மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அரசு மறுவாழ்வு இல்லத்திற்கான புதிய கட்டடத்தையும் காணொலி தொழிநுட்பம் வாயிலாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

# அவர் ஓர் அரசியல் சந்தர்ப்பவாதி மம்தா மீது காங்கிரஸ் குற்றச்சாட்டு



ஐக்கிய முற்போக்கு கூட்டணியே தற்போது இல்லை என்று மேற்கு வங்காள மாநில முதலமைச்சரான மம்தா பானர்ஜி கூறிய நிலையில், காங்கிரஸ் தலைமை செய்தித்தொடர்பாளர் ரந்தீப் சுர்ஜேவாலா நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், மம்தா பானர்ஜி ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு மாதிரிப் பேசுகிறார். அவர் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கும், தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் மாறி மாறி சென்றவர். பா.ஜனதாவுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும் என்று கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி அவர் கூறினார். ஆனால், தற்போது கோவா, உத்தரகாண்ட் ஆகிய மாநில சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸுக்கு எதிராகப் போட்டியிடுகிறார். இது மம்தா பானர்ஜிக்கு அரசியல் சமயோசிதமாகத் தெரியலாம். ஆனால், அவர் செய்வது அரசியல் சந்தர்ப்பவாதம். இதன்மூலம், தான் எதிர்ப்பதாக நடிக்கும் பா.ஜனதா, ஆர்.எஸ்.எஸ். போன்ற பாசிச சக்திகளுக்கு அவர் மறைமுகமாக உதவுகிறார்.

பிரதமர் மோடி செய்வதையே மம்தாவும் செய்து கொண்டிருக்கிறார். மோடி, எம்.எல்.ஏக்களை வாங்கினார். மம்தாவும் அதையே செய்கிறார். மோடி, கட்சிகளை உடைத்தார். மம்தாவும் அதையே செய்கிறார். முன்பு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரிடமிருந்து மம்தா உத்வேகம் பெற்றார். இப்போது, பாசிசத்தை தனது உத்வேகமாகக் கொண்டுள்ளார், என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.



# டெல்லியில் இன்று முதல் பாடசாலைகள் மூடல் காற்று மாசு குறையாததால் மாநில அரசு அறிவிப்பு

காற்று மாசு குறையாததால் டெல்லியில் இன்று முதல் பாடசாலைகள் அனைத்தும் மூடப்படுகின்றன என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

அடுத்த உத்தரவு வரும்வரை நேரடி வகுப்புகள் எதுவும் நடைபெறாது என டெல்லி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கோபால் ராய் தெரிவித்துள்ளார். முன்னதாக, காற்று மாசு தொடர்பான வழக்கினை விசாரித்த இந்திய உச்சநீதிமன்றம், காற்றும் மாசு அதிகரித்திருக்கும் போது பாடசாலைகளை எதற்காக இயங்க அனுமதித்தீர்கள்? என டெல்லி அரசுக்கு கேள்வியெழுப்பியதோடு கண்டனமும் தெரிவித்தது.

பெரியவர்களை வீட்டில் இருந்தே பணிபுரியக் கூறிவிட்டு குழந்தைகளை மட்டும் ஏன் பாடசாலைக்கு வரக் கட்டாயப்படுத்துகிறீர்கள்? எனவும் கேள்வி எழுப்பிய இந்திய உச்சநீதிமன்ற நீதிபதிகள், காற்று மாசுபாட்டைக் குறைப்பது குறித்து பக்கம் பக்கமாக பிரமாணப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் மத்திய, மாநில அரசுகள் நடைமுறையில் எதையும் செய்யவில்லை எனவும் அதிருப்தி தெரிவித்தனர்.

# படைத் தளத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட போர் விமானங்களுக்கான ரயர்கள் திருட்டு



உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோ மாவட்டம் பக்ஷிகாதலாப் பகுதியில் அமைந்துள்ள இந்திய விமானப்படையின் படைத்தளத்தில் இருந்து கடந்த 27 ஆம் திகதி ராஜஸ்தான் மாநிலம் ஜோதாப்பூரில் உள்ள விமானப்படைத் தளத்திற்கு பாரவூர்திகள் மூலம் இராணுவ உபகரணங்கள் கொண்டு செல்லப்பட்டன.

இந்தநிலையில், லக்னோவில் உள்ள ஐஸ்யானா நகர் பகுதியில் பாரவூர்திகள் சென்று கொண்டிருந்தபோது அவற்றில் ஏறிய மர்மநபர்கள் விமானப்படைத்தளத்திற்கு கொண்டு செல்லப்பட்ட மீரஜ் ரக போர் விமானத்தின் ரயர்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக ஐஸ்யானா நகர பொலிஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விமானப்படைத் தளத்திற்கு இராணுவ உபகரணங்களைக் கொண்டு சென்ற வாகனத்திலிருந்து மீரஜ் ரக போர் விமானத்தின் ரயர்கள் திருடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பாடசாலைகளில் ஒமிக்ரோன் குறித்து விழிப்புணர்வு தமிழக பள்ளிக்கல்வித்துறையால் அறிக்கை வெளியீடு

கொரோனாவில் இருந்து உருமாற்றமடைந்த ஒமிக்ரோன் வைரஸ் தொற்று, தென்னாபிரிக்காவில் தோன்றி பிற நாடுகளிலும் பரவிவருகிறது.

புதிதாக உருவெடுத்துள்ள இந்த ஒமிக்ரோன் வைரஸ் உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் நிலையில், இந்தியாவில் தொற்றுப் பாதிப்பு பரவாமல் தடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில் இன்று வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில், கல்வி நிலையங்களில் ஒமிக்ரோன் தடுப்புக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளிலும் அரசால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களை கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்றும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை தொடர்ந்து சுழற்சி முறையிலேயே வகுப்புகள் நடத்தப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்பறைகளிலும் பாடசாலை வளாகங்களிலும் தனி மனித இடைவெளியை கட்டாயம் பின்பற்ற வேண்டும் எனவும், இறைவணக்கக் கூட்டம், விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும் எனவும் நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படைச் செயல்பாடுகளை அனுமதிக்கக்கூடாது எனவும் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# எரிவாயுவை ஒழுங்குறுத்துவதற்குத் தயார் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு

மின்சாரத்துறை மற்றும் பெற்றோலிய தொழிற்துறையின் ஒழுங்குறுத்துநரான இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, தற்போது அதிகளவில் பேசப்பட்டுவரும் எல்.பீ. எரிவாயு மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற தொழில்துறைகளை ஒழுங்குறுத்துவதற்குத் தயாராகவிருப்பதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும், எல்.பீ. எரிவாயுவிற்கான தரநிலையை இலங்கை தர நிர்ணய நிறுவனத்துடன் இணைந்து கடந்த செப்ரெம்பர் மாதத்தில் வகுத்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட்ட எல்.பீ. எரிவாயு தரநிலை, எரிவாயு நுகர்வோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட முடியும்.

எனினும், 'தரநிலையை நடைமுறைப்படுத்துவதற்கு இ.பொ.ப ஆணைக்குழுவிற்கு சட்டபூர்வ அதிகாரங்கள் இல்லை' என இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர், 'எல்.பீ.ஜி. எரிவாயு தரநிலை இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு இணங்க வரைவு செய்யப்பட்டுள்ளதுடன், பங்குதாரர்களின் கருத்துகள் மற்றும் பொது கருத்து கேட்டல் செயல்முறை மூலம் பெறப்பட்ட உள்ளீடுகளைக் கருத்தில் கொண்டு இறுதி வரைவு தயாரிக்கப்படுகிறது.

எல்.பீ. எரிவாயு சிலிண்டர்களைப் பயன்படுத்தும் நுகர்வோரின் பாதுகாப்புத் தேவைகள் புதிய தரநிலையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது எரிவாயு சிலிண்டர்களின் அதிகபட்ச அழுத்தம், வீட்டுப் பாவனைக்கான எரிவாயுவின் அதிகபட்ச புரோபேன் சதவீதம், பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக சிலிண்டரின் மேற்பரப்பில் நிகர எடை, சிலிண்டரில் அடைக்கப்பட்ட திகதி உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட வேண்டும் போன்றனவாகும்.

'எல்.பி. எரிவாயுக்கென ஏற்கனவே தரநிலை தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது இதுவரை சட்டபூர்வமாக்கப்படவோ அல்லது நடைமுறைப்படுத்தப்படவோ இல்லை. தரநிலை அமுல்படுத்தப்படாமைக்கு எல்.பி. எரிவாயுவை ஒழுங்குறுத்துவதற்கான ஒழுங்குறுத்தல் அமைப்பு இல்லாமையும் ஒரு காரணமாகும்.

எல்.பி. எரிவாயு உட்பட பெற்றோலிய தொழிற்துறையை ஒழுங்குறுத்துவதற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த 2002 இல் நியமிக்கப்பட்டது.

இருப்பினும், இன்றுவரை இத்துறையை ஒழுங்குறுத்துவதற்கான சட்டபூர்வ அதிகாரம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவில்லை. 2019 இல், இலங்கை தர நிர்ணய நிறுவனத்துடன் இணைந்து பெற்றோலியப் பொருள்களுக்கான தரநிலை வரைவை உருவாக்கத் தொடங்கினோம்.

பெற்றோல், டீசல் போன்ற பொருள்களுக்கு ஏற்கனவே தரநிர்ணயம் செய்துள்ளோம். பெற்றோலியப் பொருள்களைப் பயன்படுத்தும் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு இந்த தரநிலைகளை அமுல்படுத்த வேண்டும்.

எனவே, இவற்றை அமுல்படுத்துவதற்கு ஒழுங்குறுத்தல் அதிகாரங்களைக் கொண்ட ஒரு நிறுவனத்துக்கான அவசியம் உள்ளதை நாம் காண்கிறோம்.

1998 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட எல்.பி.எரிவாயுவின் முந்தைய தரநிலையானது (எஸ்.எல்.எஸ். 712) வணிக ரீதியான புரொப்பேன், வணிகப் பியூட்டேன், புரொப்பேன் மற்றும் பியூட்டேன் கலவை மற்றும் புரொப்பேனின் சிறப்பு கடமை ஆகியபயன்பாட்டுக்கானவிவரக்குறிப்பை வழங்குகிறது. இருப்பினும், உள்நாட்டு சமையலுக்கு புரொப்பேன் மற்றும் பியூட்டேன் பயன்பாட்டின் எந்த விகிதத்தையும் இது கட்டாயப்படுத்தவில்லை.

நுகர்வோரின் பாதுகாப்பை விரைவு படுத்தும் வகையில் பெற்றோலியப் பொருள்கள் விசேட ஏற்பாடுகள் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் எல்.பி.ஜி. எரிவாயு சந்தையின் ஒழுங்குறுத்துகை அதிகாரங்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு வழங்க முடியும் என ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

'எல்.பி.ஜிக்கு சரியான ஒழுங்குறுத்துகை இல்லாததன் விளைவுதான் இப்போது நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். எதிர்காலத்தில் இவ்வாறான சூழ்நிலைகளைத் தவிர்க்கும் வகையில் பெற்றோல், டீசல், விமான எரிபொருள், கடல் எரிபொருள், உலை எண்ணெய், மண்ணெண்ணெய், இயற்கை எரிவாயு, உராய்வுநீக்கி எண்ணெய் மற்றும் கிறீஸ் உட்பட அனைத்து பெற்றோலிய தயாரிப்புகளையும் நாங்கள் ஒழுங்குறுத்த வேண்டும்' -என்றார்.

சட்டவரைஞர்களால் தயாரிக்கப்பட்ட கீழ்நிலை பெற்றோலியத் தொழில்துறையை ஒழுங்குறுத்துவதற்கான பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொழில்துறை சட்டம் 2012 இல் சட்ட மாதிபர் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

இருப்பினும், அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின்படி சரிபார்த்து, சட்டமா அதிபரால் மறுசான்றளிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்பட வேண்டும்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் சக்திவலு அமைச்சு, பெற்றோலியப் பொருள்களின் நுகர்வோரின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய பிரகடனத்தையும், முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைக் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி அன்று அறிமுகப்படுத்தியது.

அனைத்து தரமான பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகியவற்றைப் பயன்படுத்தும் நுகர்வோரின் முறைப்பாடுகளைக் கையாளவும் மற்றும் அதன் தயாரிப்பு மற்றும் சேவையின் தரம் தொடர்பாக நுகர்வோர் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்கவும் என இந்த பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

## வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் திருட்டு!



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை இரவு ஒரு லட்சத்துக்கும் மேற் பட்ட பெறுமதியான பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் -

குறித்த வைத்தியசாலையில் பணிபுரியும் தாதியர் ஒருவருடைய அறையில் வைக்கப்பட்டிருந்த தாதியருடைய பணம் மற்றும் வைத்தியசாலையின் பணம் என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் குணதிலக மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டமையுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முல்லைத்தீவில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 37 ஆம் ஆண்டு நினைவு!

முல்லைத்தீவு -ஒதியமலை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட 32 அப்பாவி பொதுமக்களின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை 11 மணியளவில் ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில், ஒதியமலை படுகொலை நடைபெற்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்ட 32 அப்பாவிப் பொதுமக்களுக்கு உறவுகளால் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளமையுடன், ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் விசேட ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கொரோனா அச்சநிலை காரணமாக இந்த நிகழ்வு மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

கடந்த 1984.12.02 அதிகாலை வேளையில், சுட்டும் வெட்டியும் இவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு கடல் வழியாக சென்று வருபவர்களால் மன்னாரில் எச்.ஐ.வி. தொற்று அதிகரிக்கும் சாத்தியம்!

### எச்.ஐ.வி. மருத்துவ விசேட வைத்திய அதிகாரி எச்சரிக்கை



இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி. தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என பாலியல் நோய் மற்றும் எச்.ஐ.வி. மருத்துவ விசேட வைத்திய அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்தார்.

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாகச் சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி. தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் தமது தடுப்பு நடவடிக்கை வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நடவடிக்கைகளுக்கு மக்களுடைய ஆதரவை எதிர்பார்த்துள்ளோம். மக்கள் இந்த விடயத்தில் விழிப்புடன் இருந்து எமது சுகாதாரத் துறைக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 11 எச்.ஐ.வி.தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு தொற்றாளர் இந்த வருடம் 2021 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் தலைமையில் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

மேற்படி கருத்தரங்கில் வைத்தியர்கள், அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2021இல் வெளியிடப்பெற்றது.